இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1389 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள்-வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
ஓய்வூதிய திணைக்களம்

ஓய்வூதிய உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

கீழ் உள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து மேற்குறிப்பிட்ட பதவியினுடைய ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வயதெல்லை.**- விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்குக் கீழ்ப்படாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

2. **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 1,26,600 - 6 x 1,560 - 8 x 2,220 - 5 x 3,480 - ரூபா 1,71,120.

4. **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.**- நியமனத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி ஆற்றல்களின் அடிப்படையில் விண்ணப்பதாரி களுக்கிடையிலிருந்து தெரிவுகள் இடம்பெறும்.

6. **சேவை நிபந்தனைகள்.**- (i) இப்பதவி நிரந்தரமானதும் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின்கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடையது. விதிவிலக்காக 01.01.2003 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் பெறும் பதவியொன்றினை வகித்திருக்கும் விண்ணப்பதாரி ஒருவர் அவர் தொடர்ந்தும் ஓய்வூதிய பிரமாணத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கான உரிமையைப் பெறுவதுடன் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்குப் பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி முதல் 12 ஆம் பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பதவிக்கு ஏற்புடையதாகும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தீவின் எப்பகுதியிலும் சேவை செய்வதற்கு சம்மதிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**- இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய 'ஏ4' அளவிலான தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து 1 முதல் 5 வரையானவற்றை முதலாம் பக்கத்திலும், 6 முதல் மிகுதியானவற்றை மறுபக்கத்திலும் வரக்கூடியதாக விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து முற்றாக பூர்த்தி செய்து 2005.05.03 ஆந் திகதிக்கு முன்னராகவே கிடைக்கக்கூடியதாக "ஓய்வூதியப் பணிப்பாளர், ஓய்வூதியத் திணைக்களம், செயலக அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

கே. ஏ. திலகரட்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர்,

ஓய்வூதியத் திணைக்களம்,
செயலக அலுவலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
ஓய்வூதியத் திணைக்களம்
ஓய்வூதிய உத்தியோகத்தர் பதவி

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :- (ஆங்கிலத்தில்) வண./ திரு./ திருமதி/ செல்வி :-
   1.2 முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :-
   1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழ்) :-----.
   1.4 முழுப் பெயர் (சிங்களம்/ தமிழ்) :-----.
2. முகவரி :-
   2.1 நிரந்தர முகவரி :-----.
   2.2 தற்காலிக முகவரி :-----.
   2.3 நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
   2.4 தொலைபேசி இலக்கம் :-----.
3. 3.1 பிறந்த திகதி :-
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
   3.2 2005.05.03 ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
   3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
   3.4 இனம் :-----.
   3.5 பால் :-----.
   3.6 சமூக அந்தஸ்து :-----.
4. கல்வித் தகைமைகள் :-
   4.1 பெற்ற பட்டம் :-----.
   4.2 பெற்ற தரம் :-----.
   4.3 பல்கலைக்கழகம் :-----.
   4.4 பட்டம் செல்லுபடியாகும் வருடம் :-----.
5. ஏனைய தகைமைகள் :-----.
6. அரச சேவையில் ஏற்கனவே பணிபுரிபவராயின்-
   6.1 திணைக்களம்/ நிறுவனம் :-----.
   6.2 தற்போது வகிக்கும் பதவி :-----.
   6.3 சேவைக்காலம் :-----.
7. நீங்கள் ஒரு பட்டதாரி பயிலுநராயின் :-
   7.1 திறைசேரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பதிவு இலக்கம் :-----.
   7.2 தற்போது பணிபுரியும் அமைச்சும், திணைக்களமும் :-----.
   7.3 தற்போது பணிபுரியும் அரச நிறுவனத்தின் பெயர் :-----.
8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

.....

ஆகிய நான், இங்கே கொடுக்கப்பட்டுள்ள சகல விடயங்களும் உண்மை மற்றும் சரியானதெனத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு குறிப்பிட்ட ஏதேனும் விபரமொன்று உண்மைக்கு மாறானதும் பொய்யானதும் என நியமனத்திற்கு முன்னால் தெரியவருமாயின் விண்ணப்பம் நிரா கரிக்கப்படும் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் அதன்மூலம் நான் தகைமையற்றவன் ஆவேன் என்பதையும் எதுவித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவராயின் திணைக்கள/ நிறுவன தலைவரின் சான்றிதழ்

வண./ திரு./ திருமதி/ செல்வி .....
..... என்பவரால் மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும், அவர் ..... ஆந் திகதியிலிருந்து இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் கடமையாற்று கிறார் எனவும், அவர் எந்தவொரு தவறும் செய்யவில்லை என்றும் அவருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவ தற்கில்லை எனவும், அவர் இப்பதவியின் பொருட்டு தேர்ந்தெடுக்கப் படின் அப்பதவியில் கடமையை ஏற்பதன் பொருட்டு அவரை பதவியிலிருந்து விடுவிப்பதற்கு முடியும் எனவும் அறிவிக்கிறேன்.

.....
திணைக்கள/ நிறுவனத் தலைவரின்
கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்)

திகதி :-----.

விண்ணப்பதாரர் பயிலுநர் பட்டதாரியாயின் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

வண./ திரு./ திருமதி/ செல்வி .....
..... என்பவரால் கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் அவர் .....
ஆந் திகதியிலிருந்து இந்நிறுவனத்தில் பயிலுநர் பட்டதாரியாக வேலை செய்கிறார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

.....
திணைக்கள/ நிறுவன தலைவரின்
கையொப்பம்
(அலுவலக முத்திரையுடன்).

திகதி :-----.
4-370

சுகாதார பராமரிப்பு, போஷணை, ஊவா-வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சு

பட்டதாரிகள் பதவிகளுக்கு ஏற்புடைய வெற்றிடங்களின் பொருட்டு விண்ணப்பங்களைக் கோருதல்

சுகாதார பராமரிப்பு, போஷணை, ஊவா-வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சின்கீழ், கீழே குறிப்பிடப்படும் பதவிகளின் பொருட்டு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

குறியீட்டிலக்கம்	பதவிப் பெயர்
01	அபிவிருத்தி உதவியாளர்
02	பொதுசன கூட்டிணைப்பு உதவியாளர்
03	உயிரியல் வைத்திய பொறியியல் உதவியாளர்

இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2005.04.29 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண் டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட்டதாரிகளை அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள் ளல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

1. **விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முறை.**- சகல விண்ணப்பங்களும் 'ஏ4' (செ. மீ. 21 x 29) அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை உரிய முறையில்

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2004, ஏப்பிறல் 21 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2005, ஏப்பிறல் 08 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
பதில் அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2005 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அமுத்தகரினால் பிரசுரிக்கப்பட்டது.

பூரணப்படுத்தாமையின் காரணமாக ஏற்படும் இழப்பை விண்ணப்பதாரிகள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதென அறிவிக்கப்படமாட்டாது.

2. **பதவிக்கான விருப்பத்தை தெரிவித்தல்**.- கீழே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு ஒரு பதவிக்கு அல்லது பல பதவிகளுக்கு தனது தகைமைகளின்படி விண்ணப்பிக்கலாம். அந்தந்தப் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு தனது விருப்பை எண் ஒழுங்கின்படியும் அப்பதவியையும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தையும் விண்ணப்பத்தில் உரிய கூண்டினுள் குறிப்பிடுதல் வேண்டும். விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ள விதத்தைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. **வருடாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,26,600-6 x 1,560-8 x 2,220-5 x 3,480-1,71,120 (பொ. நி. சு. இல. 09/ 2004)

4. **வயதெல்லை**.- 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **கல்வி உட்பட ஏனைய தகைமைகள்** :-

பதவிப் பெயர்	கல்வித் தகைமைகள்	ஏனைய தகைமைகள்
5.1 அபிவிருத்தி உதவியாளர்	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பட்டம் பெற்றிருத்தல்	உள (மன சுகாதாரம், போஷணை, விசாரணையும் சோதனையும், சட்டங்கள், பதிவேடகங்கள், குருதி மாற்றல், நிதி, உயிரியல் வைத்திய பொறியியலாளர், திட்டமிடல், பொதுசன சுகாதாரம், ஆராய்ச்சி, மனித வளங்கள் முகாமைத்துவம் ஆகிய துறையொன்றில் பயிற்சி பெற்றிருத்தல் மேலதிகத் தன்மையாகும்.
5.2 பொதுசன கூட்டிணைப்பு உதவியாளர்	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பட்டம் பெற்றிருத்தல்	மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாகப் பயிற்சி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகும்.
5.3 உயிரியல் வைத்திய பொறியியல் உதவியாளர்	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பட்டம் பெற்றிருத்தல்	வைத்திய பொறியியற் துறையில் பயிற்சியொன்றைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையொன்றாகும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள சகல விண்ணப்பதாரர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்திய பின்பு தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்களை மட்டும் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள இறுதித் தினத்தில் அல்லது அதற்கு முன்பு ஏற்புடைய சகல தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

7. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஆட்சேர்த்துக்கொள்ளும் சகல விண்ணப்பதாரர்களும் உதவுதொகை ஓய்வூதிய நிதியத்தின்கீழ் உதவுதொகை ஓய்வூதியத்திற்கு உரிமை பெறுவார். உதவுதொகை ஓய்வூதிய நிதியத்தின் பொருட்டு ஊழியரினால் உழைக்கப்படும் மாதாந்த வேதனத்தில் 8% த்தை உதவுதொகையாகச் செலுத்த வேண்டும். அரசாங்கத்தினால் உதவுதொகை 12% செலுத்தப்படும். தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிகளை வகிப்பவர்களுக்கு மேற்படி உதவுதொகை ஓய்வூதிய நிபந்தனைகள் ஏற்புடையனவாகமாட்டாது.

ஆர். மலிகஸ்பே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு போஷணை,
ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சு.

சுகாதார பராமரிப்பு போஷணை,
ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2005, மார்ச்சு 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார பராமரிப்பு, போஷணை, ஊவா-வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சு

பட்டதாரிகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் பதவிகள்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முழுப் பெயர் :-
   (i) ஆங்கிலத்தில் :----.
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :----.
3. நிரந்தர முகவரி :-
   (i) ஆங்கிலத்தில் :----.
   (ii) சிங்களத்தில்/ தமிழில் :----.
4. பால் :
   (பெண்-F), (ஆண்-M)
5. மாவட்டம் :----.
6. தனது விருப்பத்தை எண்ணொழுங்கின்படி விண்ணப்பிக்கும் பதவிப் பெயர்களும் அவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தையும் இக்கூட்டினுள் குறிப்பிடவும் :-

பதவிப் பெயர்	குறியீட்டு இலக்கம்
(i) (ii) (iii)	

7. (i) பிறந்த திகதி :----. ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.
   (ii) 2005.04.21 ஆந் திகதியில் வயது :----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. தேசிய அடையாள அட்டை இல. :-

9. பெற்றுக்கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :-

பெற்றுள்ள பட்டத்தின் பெயரும் அது அமுலாகும் தினமும்	வகுப்புகள் பெற்றிருப்பின் பெற்றுள்ள வகுப்பு	பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்	பிரதான விடயங்கள்

10. ஏனைய தகைமைகள் :-
அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருந்து ஏதேனுமொரு காரணத்தினால் விலகிய அல்லது விலக்கப்பட்ட ஆளொருவர் ஆயின் வகித்த பதவி, சேவையாற்றிய திணைக்களம், விலகுவதற்கான காரணம் என்பவற்றைக் கீழே குறிப்பிடுக :----.

11. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகள் எனவும் தவறற்றவைகள் எனவும் உறுதியுரைக்கின்றேன். விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின்படி பிழையான தகவல் ஒன்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பின் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படலாம் என்பதையும், தேர்வுக்கு பின் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கம் செய்வதற்கும் நான் ஆளாவேன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இங்கு மேலே கையொப்பமிட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ---- என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

இறப்பர் இலச்சினையை வைக்கவும்

ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இவ்விண்ணப்பதாரர் ஆகிய திரு./ திருமதி/ செல்வி ---------- இந்நிறுவனத்தில் ---------- ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய ஊழியர்/ சேவையாளராக சேவையாற்றுகின்றார். அவன்/ அவளை சேவையினின்றும் விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது. அவன்/ அவள் எதுவிதமான ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு (கண்டித்தது தவிர) உட்படவில்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத்தின்/ நிறுவனத் தலைவரின்
அல்லது அதிகாரம்பெற்றுள்ள உத்தியோகத்தரின்
கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம் :----.
திகதி :----.

4-371

புத்த சாசன அமைச்சு

பௌத்த அலுவல்கள் திணைக்களம்

பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

புத்தசாசன அமைச்சின் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பட்டதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன. இப்பதவிக்கான கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு ஆர்வமுள்ள பட்டதாரிகள் பின்வரும் விபரங்களை நன்றாக வாசித்து விளங்கிக்கொண்டதன் பின் விண்ணப்பிக்கும்படி ஆணையாளர் அதிபதி அழைப்பு விடுக்கின்றார்.

1. **பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள்** :
   (i) பௌத்த சமயத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் (சசனாறக்சக மண்டலங்கள் (பேரவைகள்) உட்பட)
   (ii) தம்மப் பாடசாலைகளின் கல்விசார் நடவடிக்கைகள் ;
   (iii) கோவிலுக்கும் கிராமத்துக்குமான ஒருங்கிணைப்பு ஊக்குவிக்கும் அதேவேளை கிராமத்தின் மைய நிலையமாக கோவில் அமையும் விதத்தில் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் ;
   (iv) கோவில் மற்றும் பிக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் ;
   (v) வேறு பௌத்த பணிகள் ;
   (vi) திணைக்களத்துடன் பிரதேச அலுவலகங்களினதும் நிறுவனங்களினதும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

2. **பதவிகளின் எண்ணிக்கையும் சேவையாற்றும் நிலையங்களும்**.- பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 580. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இரண்டு உத்தியோகத்தர்களும் மாவட்டச் செயலாளர் பிரிவில் ஒரு உத்தியோகத்தரும் பிரதான அலுவலகத்தில் 24 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுவர். சேவைக்கான தேவைகள் மற்றும் விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்த ஒழுங்கை பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதி மாற்றங்களைச் செய்யலாம். இவ்விதம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதியால் பணிக்கப்பட்டவாறு இலங்கைத் தீவின் எப்பாகத்திலும் கடமை ஆற்றவேண்டும். புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் முதல் நியமனத் திகதியிலிருந்து 03 ஆண்டு காலம் பூரத்தியாகும்வரை மாற்றம் கோருவதற்கான எந்தவொரு உரிமையையும் கொண்டிரார்.

3. **வேண்டப்படும் தகைமைகள்**.- (i) *வயதெல்லை* : விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். ஏலவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு இவ்வயது மேலெல்லை பொருத்தமுடையதாகாது.

   (ii) *கல்வித் தகைமைகள்* :
   (அ) வெளிக்கள விண்ணப்பக்காரர் : நன்கு மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாயிருக்க வேண்டும். கீழே தரப்பட்ட பாடங்கள் ஒன்றிலோ அல்லது அதற்கும் கூடுதலாகவோ பட்டப்பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும் :-
      புத்த தர்மம்
      புத்த நாகரீகம்
      சிங்கள மொழி
      பாளி மொழி
      சமஸ்கிருதம்
      ஆங்கிலம்
   (ஆ) உள்ளக மாணவர்கள் : வெளிக்கள விண்ணப்பக்காரர்களின் தகைமைகளைக் கொண்டுள்ள அதே தகைமைகளையுடைய திணைக்களத்தில் நிரந்தரப் பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தராய் இருக்க வேண்டும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- ஆண்டொன்றுக்கு ரூ. 1,26,600 - 6 x 1,560 - 8 x 2,220 - 8 x 3,480 - ரூ. 1,71,120- (ரி. பீ. 2-5-2) (09/ 2004 ஆம் சுற்றறிக்கையின்படி)

5. **வினைத்திறமைகாண் தடை**.- பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் முதல் நியமனம் பெற்ற திகதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்குள் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதியால் தேவைக்கேற்ப ஆண்டுக்கு ஒரு முறை நடாத்தப்படும்.

(பரீட்சை பற்றிய எல்லா விபரங்களும் பௌத்த அலுவல்கள் ஆணையாளரால் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு வழங்கப்படும்.)

6. (i) **ஆட்சேர்ப்பு முறை**.- நடாத்தப்படவுள்ள கட்டமைப்பு பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படுவர்.

   (ii) **அமைப்புப் பரீட்சையை நடாத்தும் முறை** :
   பரீட்சைச் சபை
   (1) திணைக்களத் தலைவர், தலைவர்
   (2) புத்தசாசன அமைச்சின் பிரதிநிதி
   (3) பொது நிருவாக அமைச்சின் பிரதிநிதி
   (4) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதி
   (5) இலங்கை நிருவாக அபிவிருத்தி நிலையத்தின் பிரதிநிதி

   புள்ளிகள் ஒதுக்கீட்டு முறை :

(1) பொருத்தமுடைய பாடத்துடன் கூடிய முதலாவது பட்டம்	40
(2) அதே பாடங்களில் முதலாவது பட்டத்துக்கும் கூடுதலாக உயர்பட்டம்	20
(3) தம்மப்பாடசாலையின் இறுதிப்பரீட்சையில் சித்தி	10
(4) தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தி	20
(5) விண்ணப்பக்காரரின் பதவிசார்ந்த பண்பும் உடற் தகுதியும்	10

7. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. உதவுதொகை செலுத்தும் ஓய்வூதியத்திட்டத்துக்கு நிதி செலுத்துவதற்கான உரித்துண்டு.

8. **விலக்களிப்பு**.- 01.01.2003 ஆந் திகதிக்கு முன் ஓய்வூதிய நன்மைகொண்ட பதவி வகித்தவர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுமிடத்து அவர் மேலும் ஓய்வூதியக் குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவர் என்பதுடன் வி. அ. ஓ. தி. இற்கும் உதவுதொகை செலுத்த வேண்டும்.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் இங்கே தரப்பட்டுள்ள மாதிரியின் ஏ4 அளவுகொண்ட கடதாசியில் தயாரிக்கப்படவேண்டும்.

(ஆ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவு அஞ்சலில் "பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதி, பௌத்த அலுவல்கள் திணைக்களம், 135, தர்மபால மாவத்தை, கொழும்பு 7" என முகவரியிடப்பட்டு 2005, ஏப்பிறல் 30 ஆந் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர்" என எழுதப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியின்பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதி.

பௌத்த அலுவல்கள் திணைக்களம்,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7.
2005, ஏப்பிறல் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

புத்தசாசன அமைச்சு

பௌத்த அலுவல்கள் திணைக்களம்

பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு

1. (i) பெயர் முதல் எழுத்துக்களுடன் (திரு./திருமதி/செல்வி) :-----.
   (ii) முதலெழுத்துகளால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
2. (i) சொந்த முகவரி :-----.
   (ii) அலுவலக முகவரி :-----.
3. ஆணா/பெண்ணா ? :-----.
4. தேசிய ஆளடையாள அட்டை இல. :-----.
5. பிறந்த திகதி :-----.
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
6. 30.04.2005 அன்று வயது :-----.
   வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
7. கல்வி மற்றும் தகைமைகளும் :-----.

(i)

பட்டம்	ஆண்டு	பாடம் சித்தி/வகுப்பு	பல்கலைக்கழகம்

(ii) வேறு பரீட்சைகளின் விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவும் :-----.

(iii) மொழித்தேர்ச்சி — பேச்சு/எழுத்து
- சிங்களம் - மிக்க நன்று/நன்று/தேர்ச்சியில்லை
- தமிழ் - மிக்க நன்று/நன்று/தேர்ச்சியில்லை
- ஆங்கிலம் - மிக்க நன்று/நன்று/தேர்ச்சியில்லை

* பொருத்தமற்றவற்றை நீக்கிவிடவும்.

(iv) கணனி அறிவு தொடர்பான தேர்ச்சி இருப்பின், அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(v) வேறு விசேட தொழிற்றகைமைகள் இருப்பின் அது பற்றி குறிப்பிடுக :-----.

8. நீதிமன்று ஒன்றினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளீரா ? ஆம் எனின் விபரம் தருக :-----.
9. என்னால் தரப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது நல்லறிவுக்கு எட்டியவரை உண்மையானவையும் சரியான வையெனவும் வெளிப்படுத்துகிறேன். மேற்குறிப்பிட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்படின் நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதினின்றும் தடுக்கப்படுவேன் எனவும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின், பதவியினின்றும் விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(விண்ணப்பக்காரர் திணைக்களத்தில் நிரந்தரப் பதவி வகிப்பின்)
விண்ணப்பக்காரர் திரு./திருமதி/செல்வி .....
..... இத்திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் நிரந்தரப்பதவி வகிக்கும் ஒரு உத்தியோகத்தர். அவர் ஒரு நிரந்தரமானதும் ஒய்வுதிய நன்மை கொண்டதுமான பதவி வகிக்கின்றார். அவர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குமான சம்பள உயர்வுகளை முறையே பெற்றுள்ளார் எனவும் இக்காலப்பகுதியில் (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் ஆளாகவில்லை எனவும் இப்போது அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எதிர்பார்த்திருக்கவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். அவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் இப்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்படமாட்டார் என்பதையும் அறியத்தருகின்றேன்.

.....
திணைக்களத் தலைவரின்
நிறுவனத்தின்/அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

4-413

பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

புத்தசாசன அமைச்சு

பௌத்த அலுவல்கள் திணைக்களம்
தம்ம பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சை

புத்தசாசன அமைச்சின் ஆதரவின் கீழும் அகில இலங்கை பௌத்த காங்கிரசின் வழிகாட்டலின் கீழும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் இரண்டாவது முறையாகவும் நடாத்தப்படவுள்ள தம்மப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதியால் கோரப்படுகின்றன.

பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவுள்ள தகைமையுடைய விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை ஏ4 அளவுகொண்ட கடதாசியில் தயாரித்து சமர்ப்பிக்கவேண்டியது.

1. **குறிக்கோள் :**
   (i) தம்மப் பாடசாலை ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஆகக் குறைந்தளவு தகைமையை வழங்குதல்.
   (ii) தம்மப் பாடசாலைகளில் தமது சொந்த விருப்பின் பேரில் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அவர்களுக்கு நியமனக் கடிதங்கள், அடையாள அட்டைகள் போன்ற வற்றை வழங்குவதன் மூலம் நிரந்தரமாக்கப்படுவதற்கு உரித்துடையதான ஆகக் குறைந்த தகைமையை வழங்குதல்.
   (iii) ஆரம்பத் தகைமைகளைத்தானும் கொண்டிராத ஆசிரியர்களுக்கு உயர் கல்வி நடவடிக்கைகளிலான அறிவைப் பெறுவதற்கு ஊக்கமளித்தல்.
   (iv) தம்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சமூகத்தில் ஒரு நன்மதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் பொதுமக்களிடையே அவர்களின் சேவைக்கு மதிப்பளிக்கச் செய்யவும்.

2. **பரீட்சை நடாத்தப்படும் விதமும் திகதியும்.**- பரீட்சை பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின்கீழ் 2005, யூலை 23 ஆந் திகதியன்று இலங்கைத் தீவின் 20 மாவட்டங்களிலும் 20 நிலையங்களில் நடாத்தப்படும். இப்பரீட்சை சிங்கள மொழியில் மட்டுமே நடாத்தப்படும்.

3. **பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறை.**- (i) பின்வரும் மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii) தலைமை ஆசிரியரால் சான்றுபடுத்தப்படாத எல்லா விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி 2005, மே 15 ஆந் திகதியாகும். அதன்பின் வந்துசேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைக்கு சமுகமளிக்காத அல்லது சித்தியடையாத விண்ணப்பக்காரர்கள் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமாயின் பரீட்சைக் கட்டணமாக ரூ. 100 செலுத்த வேண்டும். இத்தேவைக்கென பௌத்த அலுவல்கள் ஆணையாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளைகள் கறுவாத்தோட்ட அஞ்சல் அலுவலகத்தில் மாற்றப்படக்கூடிய விதத்தில் எடுக்கப்பட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

(v) பரீட்சைக்கு முதல் முறை தோன்றும் விண்ணப்பக்காரர்களுக்கு பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

(vi) முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், பதிவு அஞ்சலில் நேரடியாக "பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதி, 135, தர்மபால மாவத்தை, கொழும்பு" என முகவரி எழுதப்பட்டு 2005, மே 15 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தம்மப்பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை" என எழுதப்பட வேண்டும்.

4. **பரீட்சைக்கான பாடவிதானம்.**- (i) வினாத்தாள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆம் தரங்களுக்கான பாட நூல்களை ஆதாரமாகக் கொண்டதாயிருக்கும்.

(ii) வினாத்தாள் 3 பிரிவுகளை உள்ளடக்கியதாயிருக்கும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒரு வினா உட்பட மொத்த 5 வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும்.

(iii) சுருக்கமான விடைகள் எதிர்பார்க்கப்படும்.

(iv) மொத்தப் புள்ளிகள் 100. சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி 40 ஆகும்.

சித்திகள் பின்வரும் விதத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளன :
- 40-60 சித்தி
- 61-75 திறமைச் சித்தி
- 76-100 சிறப்புச் சித்தி

(v) பரீட்சைக் காலம் 3 மணி

(vi) இப்பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொருவருக்கும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

வேண்டிய தகைமைகள்.- (i) கடந்த ஆறு மாத காலத்தின்போது புத்தசாசனத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தம்மப் பாடசாலையில் ஆசிரியராகத் தொடர்ந்து சேவை ஆற்றியிருக்க வேண்டும்.

(ii) 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 50 வயதுக்கு குறைந்தவராயுமிருக்க வேண்டும்.

(iii) கீழே பந்தி 6 இல் தரப்பட்ட தகைமைகளையுடைய எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

6. **பரீட்சையினின்றும் விலக்குரிமை.**- (i) கீழே சொல்லப்பட்ட கல்வித் தகைமைகளில் ஒன்றையோ அல்லது அதற்கும் கூடுதலான வற்றையோ பெற்றிருப்பின் அவர்களுக்கு இப்பரீட்சையில் தோன்றுவதிலிருந்தும் விலக்குரிமை அளிக்கப்படும்.

(ii) தாம் கொண்டுள்ள தகைமை பற்றி நிரூபிக்கப்படுமிடத்து அவர்களுக்கு நியமனக் கடிதம், அடையாள அட்டையும் மற்றும் நன்மைகளும் வழங்கப்படும். (ஆனால் அவர்களுக்கு தம்மப்பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.)

(1) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் புத்தசமயத்தில் திறமைச் சித்தி உட்பட வேறு ஏதேனும் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
தம்மப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் அல்லது தர்மச்சாரியா பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(2) கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் புத்த தம்மப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(3) ஆரம்ப பிரிவேனாக் கல்வி இறுதிப் பரீட்சையில் சித்தி.

(4) பிறாச்சீன பிறாநம்ப பரீட்சையில் இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சையில் சித்தி.

(5) புத்த தம்ம, பௌத்த மெய் விளக்கவியல்/பௌத்த நாகரிகம் சார்ந்த ஏதேனும் ஒரு பாடத்தில் பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(6) பௌத்த மற்றும் பாளிப் பல்கலைக்கழகத்தில் புத்த தம்மத்தில் டிப்புளோமா பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(7) தம்மப் பாடசாலைகளில் 03 ஆண்டுகளுக்கும் கூடுதலான சேவையை உடைய 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள்.

(8) தம்மப் பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்களாயுள்ள கோயில்களுக்குப் பொறுப்பாயுள்ள வண. பிக்குகள்

அல்லது

(9) இப்போது அரசாங்கப் பாடசாலைகள்/பிரிவெனாக்கள் ஆகியவற்றில் சேவையாற்றும் ஆசிரியர்களும் அல்லது ஓய்வுபெற்ற ஆசிரியர்களும்.

7. **பரீட்சைக்கான அனுமதி.**- (i) அனுமதி அட்டை ஒன்று ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அனுப்பி வைக்கப்படும். சுட்டிலக்கமும் ஆளடையாளச் சான்றிதழ் படிவமும் அதனுடன் இணைத்து அனுப்பப் படும்.

(ii) விண்ணப்பக்காரரின் ஆளடையாளத்தைச் சான்றுபடுத்து வதற்கெனப் பின்வரும் ஆவணங்களுள் ஏதாவது ஒன்றை பரீட்சை நடக்கும் நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும் :-
- (அ) தேசிய ஆளடையாள அட்டை ;
- (ஆ) அஞ்சல் அதிபதியால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை ;
- (இ) கடவுச்சீட்டு ;
- (ஈ) சாரதி அனுமதிப்பத்திரம் ;

(iii) ஆளடையாளம் சான்றுப்படுத்தப்படாத விண்ணப்பதாரர் களின் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படமாட்டாது.

8. **வேறு விடயங்கள்.**- (i) இப்பரீட்சை, சமஸ்த்த லங்கா சாசனறக்ச மண்டலயவின் அங்கீகாரத்துடனும் அறிவுறுத்தல்களுடனும் நடாத்தப் படுகின்றது.

(ii) இப்பரீட்சையில் சித்தியடைபவர்கள் வேறு எதுவிதக் கல்வித் தகைமைகளும் இல்லாது சிறிஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தஹம் சரசவிய டிப்புளோமாச் சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை கொண்டவர்களாகும்.

(iii) இப்பரீட்சையை தள்ளுபடி செய்வதற்கோ அல்லது பரீட்சை பற்றியதான இறுதி முடிவை எடுப்பதற்கோ வேண்டிய அதிகாரம் யாவும் பௌத்த அலுவல்களுக்கான ஆணையாளர் அதிபதியின் உரிமையாகும்.

(iv) இங்கு குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலான தகவல்கள் எதையும் பற்றிய மேலும் விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அவை பற்றி பௌத்த அலுவல்களுக்கான ஆணையாளர் அதிபதியுடன் தொடர்புகொள்ளவும்.

எச். டபிள்யு. டி. சுனில்,
பௌத்த அலுவல்கள் ஆணையாளர் அதிபதி.

பௌத்த அலுவல்கள் திணைக்களம்,
இல. 13, சிறிமத் அனகாரிக தர்மபால மாவத்தை,
கொழும்பு 7,
29 மார்சு, 2005 (புத்த வருடம் 2548).

மாதிரி விண்ணப்பப்படிவம்

புத்தசாசன அமைச்சு

பௌத்த அலுவல்கள் திணைக்களம்

தம்மப் பாடசாலை ஆசிரியர் பரீட்சை

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்

1. முழுப் பெயர் (சிங்களத்தில்) :-

முழுப் பெயர் (ஆங்கிலத்தில் தடித்த எழுத்துக்களில்) :-

(ஒவ்வொரு கூட்டுக்குள்ளும் ஒரு எழுத்தை மட்டும் எழுதவும்)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) :-

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் தடித்த எழுத்துக்களில்) :-

(ஒவ்வொரு கூட்டுக்குள்ளும் ஒரு எழுத்தை மட்டும் எழுதவும்)

3. வண./ஆண்/பெண் :-----.

4. சொந்த முகவரி (சிங்களத்தில்) :-

சொந்த முகவரி (ஆங்கிலத்தில் தடித்த எழுத்துக்களில்) :-

(ஒவ்வொரு கூட்டுக்குள்ளும் ஒரு எழுத்தை மட்டும் எழுதவும்)

5. பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
6. 01.01.2005 அன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
7. தேசிய ஆளடையாள அட்டை இல.. :-----.
8. தம்மப் பாடசாலையின் பெயர் :-----.
9. தம்மப் பாடசாலை முகவரி :-----.
10. பிரதேச சாசனறக்சக மண்டலய :-----.
11. மாவட்டம் :-----.
12. கொண்டுள்ள உயர் கல்வித் தகைமை :-----.
13. தம்மப் பாடசாலையில் நியமனம் பெற்ற திகதி :-----.
14. 01.01.2005 வரையான சேவைக் காலம் :-----.
15. 2004 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைக்கு விண்ணப்பித்த வரா ?
(எ) ஆம் எனின் சுட்டு இல. :-----.
(ஏ) காசுக் கட்டளை இல. :-----.

என்னால் இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இத்தகவல்களில் எவையேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என வெளிப்படுமிடத்து அது பரீட்சையின் முன்னாயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அது பரீட்சையின் பின்னாயின் எனது பரீட்சைப் பெறுபேறுகள் தடுத்து வைக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நானறிவேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

சான்றுரை

.....

தம்மப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகிய நான், வண/திரு./திருமதி/செல்வி .....
..... இப்பாடசாலையில் .....
ஆண்டுகளாக தொடர்ச்சியாகச் சேவையாற்றியுள்ளார் என்பதையும், அவர் தம்மப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சைக்குப் பொருத்தமான நிபந்தனைகள் எல்லாவற்றையும் திருத்திப்படுத்துகின்றார் என நான் சான்றுபடுத்துகின்றேன்.

.....
சான்றுபடுத்துபவரின் கையொப்பம்.
பெயர் :
அலுவலக முத்திரை :

திகதி :-----.

அலுவலக உபயோகத்துக்கு மட்டும் :
1. சுட்டெண் :-----.
2. வழங்கப்பட்ட அனுமதி அட்டை :-----.
3. கண்டுணரப்பட்ட குறைபாடுகள் முறையே தெரிவிக்கப் பட்டவை :-----.
4. பரீட்சை நிலையம் :-----.

4-365

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

பொருட்கள் விற்பனவும் பிறவும்

இலங்கை பொலிஸ் திணைக்களம்

பிராந்திய பொலிஸ் களஞ்சியம் – கேகாலை

பாவனைக்கு உதவாத பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாவனைக்கு உதவாத பொருட்களை 2005.04.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேகாலை பொலிஸ் நிலையத்தில் உள்ள களஞ்சியசாலை வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2. ஏலவிற்பனை ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் குறிப்பிட்ட பொருட்களை பொது மக்கள் பார்வையிடலாம்.

3. ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு உடனடியாக பணம் செலுத்த வேண்டியதுடன், ஏலவிற்பனை முடிவுற்றதும் குறிப்பிட்ட பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

தொடல் இலக்கம்	பொருட்களின் விபரம்	எண்ணிக்கை
1.	நீர்வடிகட்டி(பில்டர்)	04
2.	மல்டிபொட்	01
3.	மண்வெட்டி	05
4.	ஆமைப்பூட்டு (பெரியது)	05
5.	ஆமைப்பூட்டு (சிறியது)	19
6.	வானொலிப் பெட்டி	01
7.	மேசை மின்விசிறி	02
8.	இரும்புக் கட்டில் (ஒற்றை)	20
9.	இரும்புக் கட்டில் (இரட்டை)	16
10.	கதிரை	23
11.	பெரிய நாற்காலி	09
12.	தேங்காய் துருவி	01
13.	தட்டெழுத்து இயந்திரம் (சிங்களம்)	04
14.	தட்டெழுத்து இயந்திரம் (ஆங்கிலம்)	01
15.	மின் கொதிகலன்	01
16.	வாயு விளக்கு	01
17.	துப்பாக்கி அலுமாரி	02
18.	கதிரை செட்	01
19.	புல் வெட்டும் இயந்திரம்	01
20.	ஸைலஜன் விளக்கு	01
21.	புல்வெட்டும் கத்தி	03
22.	கத்தி	01
23.	வர்ணத்தொலைக்காட்சி	03
24.	சக்கரக் கட்டில்	02
25.	மின்விசிறி	02
26.	பெக்ஸ் இயந்திரம்	02
27.	பிரயாணப் பை	05
28.	அலுவலக பை	01
29.	மின் கேத்தல்	01
30.	அலுமினிய ஜாடி	02

வில்பிரட் மஹநாயக்க,
சிரேஷ் பொலிஸ் அத்தியட்சகர்,
கேகாலைப் பிரிவு.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அலுவலகம்,
கேகாலை,
2005.03.01
4-321

ஏல விற்பனைகள்

றுஹுனு அபிவிருத்தி வங்கி-மாத்தறை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

மிகப்பெரிய காணி அதிலுள்ள பயிர்ச்செய்கை, கட்டிடங்களுடன் ஏல விற்பனை

றுஹுனு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு குறிப்பிட்ட சொத்துக்கள் 2005.05.03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

சொத்துக்கள் பற்றிய விவரணம்.- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே மாத்தறை கடவத் சதரைக்குள் மெத்தவத்தேயில் அமைந்துள்ள குருந்துவத்த, தல்கொரடுவ, முரமடுவ முஹந்திரம்கெவத்த, பிரவுன்ஹில் கொஸ்பெலவத்த, இஹலவத்த, கோன்கஹவத்த, அரலியவத்த ஆகிய காணிகளினால் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 2 என்ற துண்டுகளினால் பிரித்த 'டீ' எழுத்தைக் கொண்ட 21 பேர்ச்சஸ் மிகப்பெரிய காணியை அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஜ. பி. கால்லகே அவர்களினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 1998.12.12 ஆந் திகதிக்குரிய இலக்கம் 874 என்ற வரைபடத்தில் குறிப்பிட்டபடி உள்ள வரைபடத்தில் பிரகாரம் பிரிக்கப்பட்ட 'டீ' 3 என்ற நான்கு தசம் இரண்டு சைபர் (0ஏ. 0றூ. 4.20பே.) பேர்ச்சஸ் கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அனைத்துமாகும். இக்காணி மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்தில் ஏ 389/244 இல் பதியப்பட்டிருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு.- 2003.07.25 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2003.08.29 ஆந் திகதியின் 'தினமின', 'டெய்லி நியூஸ்', 'தினகரன்' போன்ற பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியைக் கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.- மாத்தறையிலிருந்து தெவிநுவர பக்கமாக சுமார் கி. மீ. 3 அளவு தூரம் செல்ல சந்திக்கும் பிரவுன்ஹில் சந்தியை தாண்டி சுமார் 200 மைல் முன்னோக்கி சென்றதும் பாதையின் தெற்குப் பக்கமாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ்க்குறிப்பிடுகின்ற பணம் கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :-

கொள்வனவு விலையில் 10% க்கான பணமும், ஏலவிற்பனையாளர் தரகு 2 1/2% மும், பிரதேச சபைக்கு 1% மும், ஏலவிற்பனை செலவும் இதர செலவுகளும் (இருப்பின்) ஆகும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், "மாத்தறை, பம்புரண, அனகாரிக தர்மபால மாவத்தை, இல. 382ஏ எனும் இடத்தில் அமைந்துள்ள றுஹுனு அபிவிருத்தி வங்கி, பொது முகாமையாளர்" இற்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்தாதுவிடின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% இற்கான பணத்தைத் திரும்பவும் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. உரிமை கோரும் ஒப்பினையையும், வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041-2228731
4-325/1

றுஹுனு அபிவிருத்தி வங்கி-கம்புருகமுவ கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

சகல பயிர்ச்செய்கையும், கட்டிடங்களுடனான ஏல விற்பனை

றுஹுனு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின்படி இங்கு குறிப்பிட்ட சொத்துக்கள் 2005.05.05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

சொத்துக்கள் பற்றிய விவரணம்.- மாத்தறை நகர சபை எல்லைக்குள் வெலிவேரிய பிரதேசத்தில் ராகுல வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பிலக்கம் 106 என்ற கம்புருகமுவகே வத்தயின் 'பி' எழுத்துடைய,மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட 'பி' 1 என்ற, 25.30 பேர்ச்சஸ் விசாலமுடைய காணி சகல பயிர் செய்கைகளும் கட்டிடங்களும் உட்படவாகும்.

மேலதிக விபரங்களுக்கு.- 2003.11.07 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2003.02.17 ஆந் திகதிய 'திவயின', 'டெயிலி நியூஸ்', 'தினகரன்' போன்ற பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியைக் கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.- மாத்தறை ராஹுல வீதியில் வரிமதிப்பிலக்கம் 106 ஆம் இடத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செலுத்தும் முறை.- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ்க்குறிப்பிடுகின்றவாறு பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) ஏலவிற்பனையாளரின் கட்டணமாக விற்பனை விலையில் 2 1/2% ;
(3) மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;
(4) எழுதுவினைஞரினதும் அறிவிப்பாளரினதும் கட்டணமாக 500 ;
(5) விற்பனை செலவும் மற்றும் கட்டணங்கள் இருப்பின் அந்நிதியும்

கொள்வனவு விலையில் 90% க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புரண, அனகாரிக தர்மபால மாவத்தை, இல. 382ஏ எனும் இடத்தில் அமைந்துள்ள றுஹுனு அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர்" இற்கு செலுத்தவேண்டும். தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209. பெக்ஸ் இலக்கம் : 041-2221450.

உரிமை கோரும் ஒப்பினையையும், வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். மேலே குறிப்பிட்டபடி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் 10% இற்கான பணத்தைத் திரும்பவும் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும்,
மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041-2228731
4-325/2

றுஹுனு அபிவிருத்தி வங்கி-அகுரெஸ்ஸ கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

அனைத்து பயிர்ச்செய்கை போன்றன அடங்கிய மிகப்பெரிய காணி ஏல விற்பனை

றுஹுனு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு குறிப்பிட்ட சொத்துக்கள் 2005.05.06 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

சொத்துக்கள் பற்றிய விவரணம்.- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிகம் கோறளையில் கெடன்விலயில் அமைந்துள்ள ஹின்தலியவத்த என்ற காணியில் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1 என்ற ஒரு றூட், இருபத்தைந்து தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 25.67பே.) என்ற மிகப்பெரிய காணி, அனைத்து பயிர்கள் போன்றன அடங்கியது.

மேலதிக விபரங்களுக்கு.- 2003.08.29 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2003.09.08 ஆந் திகதியின் 'தினமின', 'ஐலண்ட்', 'தினகரன்' போன்ற பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியைக் கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.- அக்குரெஸ்ஸயிலிருந்து யக்கலமுல்ல பாதையில் 4 1/2 மைல் தூரம் செல்ல சந்திக்கும் கெடன்வில சந்திக்கு அருகே இருக்கும் கிலிட்டுவ பாதையில் மீற்றர் 150 அளவு தூரம் செல்ல இக்காணி தென்படும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ்க்குறிப்பிடுகின்ற பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) ஏலவிற்பனை செலவும் இதர செலவுகள் இருப்பின் அப்பணமும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், "மாத்தறை, பம்புரண, றுஹுனு அபிவிருத்தி வங்கியின் சாதாரண அதிகாரிக்கு" செலுத்தவேண்டும்.

மேலுள்ளபடி பொருந்திய பிரகாரம் 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்தாதுவிடின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% இற்கான பணத்தைத் திரும்பவும் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும், வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இலக்கம் : 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041-2228731
4-325/3

றூஹுணு அபிவிருத்தி வங்கி-கரன்தெனிய கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

மரங்கள், பயிர்கள், பழவர்க்கங்கள் போன்றன அடங்கிய மிகப்பெரிய காணி ஏல விற்பனை

றூஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ் இங்கு குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2005.05.09 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் என்னால் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்.-காலி மாவட்டத்திலே கரன்தெனியவுக்கு உரிய கக்கடுவேயில் அமைந்துள்ள குருகந்தயும், கொடல்லே உடவத்த என்ற காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 18 என்ற றூட் ஒன்றும் பேர்ச்சஸ் பதினெட்டு தசம் ஒன்றும் எட்டு ஏழு ஐந்து (0ஏ. 1றூ. 18.1875பே.) கொண்ட மிகப் பெரிய காணி, அதில் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், பழவர்க்கங்கள் போன்ற அனைத்துடனுமாகும்.

மேலதிக விபரங்களுக்கு.-2001.07.13 ஆந் திகதியில் அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் பகுதியையும, 2004.09.22 ஆந் திகதியில் "தினமின", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியை கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.-கரன்தெனியவிலிருந்து எல்பிடிய பக்கமாக செல்ல தென்படும் கிரிவெத்த ஹதர தேவாலை பாதையில் (யக்கடுவக்கு செல்லும் பாதை) சுமார் 1 மைல் தூரம் செல்ல தென்படும் தங்அத்த சந்தியிலிருந்து திரும்பி சுமார் 1/2 மைல் தூரம் செல்ல பபரகந்த பிரதேசத்தில் இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.-ஏல விற்பனை தீர்ந்து விட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ் குறிப்பிடுகின்றபடி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% மும் ;
(2) உள்ளூர் அதிகாரியின் தரகு என உள்ளூர் அதிகாரசபைக்கு 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர், கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும்.

கொள்வனவு விலையில் வீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரான, அநாகரிக தர்மபால மாவத்தையிலுள்ள, 382ஏ, என்ற முகவரியல் அமைந்துள்ள றூஹுண அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 041-2226208, 2226209, 2231532.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத்தவறின் தற்போதைக்கு செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோறும் ஒப்பினையையும், குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக் கொள்க. தொலைபேசி இல. : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை,
தொலைபேசி இல. 041-2228731
4-325/4

றூஹுணு அபிவிருத்தி வங்கி-கரன்தெனிய கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

காலி மாவட்டத்திலே வெல்லபட பத்துவயில் அமைந்துள்ள கஜுகஹமானான என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 07 என்ற 19.50பே. கொண்ட மிகப் பெரிய காணியும், 11X13 முழு அளவுள்ள நிரந்தர கட்டிடங்கள் கொண்டதும் அங்குள்ள மரங்கள் பழவர்க்கங்கள், போன்ற அனைத்தும் ஏல விற்பனை

றூஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மேலே குறிப்பிட்ட சொத்துக்கள 2005.05.11 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் என்னால் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2003.11.28 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலும் 2004.02.19 ஆந் திகதியின் வெளியிடப்பட்ட "தினமின", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியை கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.-மாத்தறை கொழும்பு வீதியில் அமைந்துள்ள அம்பலன்கொட நகரத்தில் ஆரமஹவன எரல்பிட்டிய வீதியில் மஹஏதண்ட சன்திரியிலிருந்து ஊரகஸ்மஹன்திக்கு 2 1/2 கி. மீ. தூரம் செல்ல சந்திக்கும் மஹகும்புர, சந்தியிலிருந்து தெற்கே இருக்கும் கொடவெல பாதையில் செல்லும் போது பாதையின் இடது பக்கமாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்).

கொடுப்பனவு செலுத்தும் முறை.-ஏல விற்பனை தீர்ந்து விட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ் குறிப்பிடுகின்றபடி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% மும் ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர், கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அப்பணமும்;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் வீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரான, அநாகரிக தர்மபால மாவத்தையிலுள்ள றூஹுண அபிவிருத்தி வங்கியின் சாதாரண அதிகாரிக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 041-2226208, 2226209, 2231532.

உரிமை கோறும் ஒப்பினையையும், குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். மேலே குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாதுவிடின் தற்போதைக்கும் செலுத்திய கொள்வனவு விலையில் 10%க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை,
தொலைபேசி இல. 041-2228731
4-325/5

மக்கள் வங்கி-கிருலப்பனை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை, பள்ளேபற்றுவில், ஹோகந்தர வடக்கில் (கஹன்தொட்ட) அளுபோகஹவத்த மற்றும் கொடபரகஹவத்த என அழைக்கப்படும் பெறுமதியான ஆதனம் ஏல விற்பனை விஸ்தீரணம் : பன்னிரண்டு தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.10பே.)

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், மேற்படி சொத்தை 2005.05.03 ஆந் திகதி மு. ப. 11.00 மணியிலிருந்து அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

தீர்மான அறிவித்தலுக்கு.- 2004.11.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2000.10.19 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", 2004.10.19 ஆந் திகதிய "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்திற்குச் செல்லும் வழி.- மாலேபேயிலிருந்து அத்துருகிரிய வீதியினூடு அரங்கல சந்திவரை சென்று கஹன்தொட்ட வீதிக்கு வந்து ஏறத்தாழ 1 கி. மீ. செல்ல மும்முனை வீதியையடைய, உங்கள் வலதுபக்கத்தில் பக்மெஹ வீதி வரும். இவ்வீதியினூடு ஏறத்தாழ 100 மீட்டர்கள் செல்ல, உங்கள் இடதுபக்கம் கிறவல் வீதி வரும். அதனூடு ஏறத்தாழ 50 மீட்டர்கள் செல்ல குறித்த சொத்து உங்கள் இடதுபக்கம் அமைந்துள்ளது. (இச்சொத்தானது ஏஎஸ்பீ அல்லது பொன்சேகா காடன்ஸ் என அழைக்கப்படும்.)

கொடுப்பனவு செய்யும் முறை.- சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாக ஏலத்தின் இறுதியில் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% மும் ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்கு செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(5) மொத்த விற்பனைச் செலவும் ஏனைய அறடுகளேதுமிருப்பின் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

விற்பனையிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி வலய அலுவலகம் (மேற்கு வலயம்-1), உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. 2393678, 2387068, 2327848.

மேலேயுள்ள விலாசத்தில் காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு சொல்லப்பட்ட தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீளவும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

ரஞ்சித் எஸ். மஹநாம
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர்.

மஹாநாம ட்ரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
4-372

வயம்ப அபிவிருத்தி வங்கி-மீரிகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

பெறுமதிமிக்க வசிப்பிடச் சொத்து ஏல விற்பனை

மீரிகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்கானிகொட கிராமத்தில் அமைந்துள்ள "கெந்தலந்தவத்த எனும் கல்பலலியந்த" என்றழைக்கப்படும் காணியில் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு காணித்துண்டு அத்துடன் அதனுள்ளடங்கும் வீட்டுக் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்

(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 35.2பேர்ச்சஸ்)

(இவ்வாதனம் மக்கானிகொட, பஸ்யாலை, மஹாவாசல லியனகே தர்மப்பிரிய என்பவர் ஈட்டாளராகவும் கடப்பாடுடையவராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வயம்ப அபிவிருத்தி வங்கியால் பெறப்பட்ட ஆதனம்)

வயம்ப அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேல் விபரிக்கப்படும் ஆதனத்தை 17.05.2005 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.- 17.04.2003 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 24.05.2004 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

ஆதனத்தை வந்தடைதல்.- மீரிகம் நகரிலிருந்து பஸ்யால வழியாக சுமார் 6 கிலோமீற்றர் தூரம் கல்அமுன சந்திவரை வந்து இடதுபக்கமாக திரும்பிபட்டலிய பாதையில் சுமார் 2 கிலோமீற்றர் தூரம் வந்து எதிர்நோக்கும் சந்தியிலிருந்து வலது பக்கமாகவுள்ள புபுல பாதையில் தொடர்ந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனத்தை வந்தடையலாம்.

கொடுப்பனவு செய்யும் முறை.- விற்பனை தீர்மானிக்கப்பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் கட்டணங்கள் ஏலவிற்பனையாளருக்கு பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் கட்டணமாக 10%; பிரதேச சபை கட்டணமாக 1%; ஏல விற்பனைத் தரகாக 2 1/2%; நொத்தாரிசுக் கட்டணம்; விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்பத்திரக் கட்டணமாக ரூபா 2,000; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணமாக ரூபா 500; பகிரங்கப்படுத்துதல் கட்டணம்.

கொள்முதல் தொகையில் மிகுதியான 90%ஐ, 30 நாட்களுக்குள் வயம்ப அபிவிருத்தி வங்கி, 191, நீர்கொழும்பு பாதை, குருநாகல் என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 037-2227428, 2227429, 2227567.

ஜ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட
ஏலவிற்பனையாளர்.

இல. 432/1, மவுன்ட் பிலசன்ட் கார்ட்ன்,
ஹீரஸ்ஸகல,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2217768, 071-2755974, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2217768
4-373

டீ. எப். சீ. சீ. வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (விசேட சட்டதிட்டங்கள்) வங்கிக் கடனை மீளப்பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் 8 ஆம் தொகுதியின் பிரகாரம் செய்யப்படும் ஒரு ஏல விற்பனை

காணி ஏல விற்பனை

டீ. எப். சீ. சீ. வங்கியில் ஈடுவைத்துள்ள இங்கு கீழ்க்காணும் காணி 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அது அமைந்திருக்கும் இடத்தில் என் மூலம் விற்பனை செய்யப்படும் என எல்லா மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

ஆதனத்தின் விவரணம்.-வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹிரியால ஹதப்பத்து பிரிவின் இஹல விசிதெகே கோரலயில் பபுலுவயும் போரமுள்ள உடவல பன்னல அமைந்திருக்கும் கிராமத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் மீனாச்சி தோட்டம் எனும் தோட்டத்திற்கு அங்கீகாரம்பெற்ற நில அளவையாளர் எவ். எம். எஸ். ஹேரத் மூலம் 1996.11.07 ஆந் திகதி அளந்து தயார்படுத்திய இல. 1 ஆம் இலக்கத்தையுடைய வரைபடத்தில் 6 ஏக்கரும் 18 பேர்ச்சஸ் அளவைக் கொண்ட பாரிய இடமும் இங்கிருக்கும் அதற்குரிய அனைத்து சொத்துக்களும் பகிரங்க ஏலமிடப்படும்.

இந்த சொத்துக்களை டீ. எப். சீ. சீ. வங்கிக்கு ஈடுவைத்திருப்பவர்கள் மொகமட் யூனுஸ் மொகமட் முனீர் மற்றும் மொகமட் லெப்பே சித்தி அஸ்மா உரிமையாளர் என்பவராகும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை :

(1) ஏலம் முடிவடைந்ததும் கொள்முதலின் 10% (நூற்றுக்கு பத்து);
(2) பிரதேச கட்டுப்பாட்டு அதிகாரிக்குச் செலுத்தவேண்டிய விற்பனை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலம் போடுபவரின் தரகு 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) பிரச்சார செலவு ;
(5) எழுதுவினைஞனின் கட்டணம் 500 ;
(6) விற்பனை நிபந்தனையை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,500 அப்போதே செலுத்தப்பட வேண்டும் ;
(7) கொள்முதலின் மீது 90 வீதத்தையும் இலங்கை அரசினால் அறவிடப்படும் அனைத்துவிதமான வரிகளையும் சேர்த்து ஏலத் திகதியிலிருந்து வேலை நாட்கள் 30 க்குள் டீ. எப். சீ. சீ. வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

